# கிறிஸ்து, அவர் தம் அப்போஸ்தலரின் உபதேசங்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவரது கன்னிகைப் பிறப்பு, அவரது கிரியைகள், அவரது போதனைகள், அவர் சிலுவையில் அறையப்பட்டது, அவரது உயிர்த்தெழுதல், அவர் பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது, அவருடைய இரண்டாம் வருகை, ஆயிர வருட அரசாட்சி, வெள்ளைச்சிங்காசன நியாயத்தீர்ப்பு, நித்தியம் ஆகிய இவற்றையும் நாங்கள் பிரசங்கிக்கிறோம். பின்வருவன கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் உபதேசங்களாகும்.

## திரித்துவம்:

தேவன் ஒருவரே; எனினும் அவர் மூன்று ஆள் தத்துவங்கள் உடையவர் - பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியானவராகிய தேவன். அவர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள்; நித்தியமாக நிலைத்திருப்பவர்கள். திரித்துவ தேவன் பேரிலுள்ள விசுவாசம் சபையின் முதுகெலும்பாகும் (ஏசாயா 48:16, 1யோவான் 5:7)

## மறுபடியும் பிறத்தல்:

1. பாவ உணர்வு (அப் 2:37)
2. மனஸ்தாபம் (2 கொரி 7:10,11)
3. பாவ அறிக்கை (1யோவான் 1:9)
4. தேவனோடும் மனுஷரோடும் ஒப்புரவாகுதல் (2 கொரி 5:20, மத் 5: 21-26)
5. திருப்பிக்கொடுத்தல் (லூக்கா 19:8)

6. நீதிமான்களாக்கப்படுதல் (ரோமர் 5:6,9)
7.பரிசுத்தமாகுதல் (1 யோவான் 1:7)

**தண்ணீர் ஞானஸ்நானம்:**

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவ ஊழியர் மூலம் திரித்துவ தேவனுடைய நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும் (மத் 28:19). இது மறுபடியும் பிறந்த ஒரு தேவ பிள்ளைக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது (மாற்கு 16:16)

**தெய்வீக சுகம்:**

கர்த்தராகிய இயேசு நம் வியாதிகளையும் பெலவீனங்களையும் சிலுவையின்மேல் சுமந்தார் (மத் 8:17, 1 பேதுரு 2:24). அவர் தம்முடைய சீஷர்களுக்கு வியாதிகளைச் சுகமாக்க அதிகாரம் கொடுத்தார் (மாற்கு 3:15). தெய்வீக சுகம் பிள்ளைகளின் அப்பமாகும் (மத்15:26)

**பரிசுத்த ஆவியின் அபிஷேகம்:**

இது உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுதலாகும் (லூக்கா 24:49). இதில் திரித்துவ தேவன் நமக்குள்ளே வாசம்பண்ண வருகிறார் (யோவான் 14: 16,20); நம் இருதயம் தேவனுடைய அன்பினால் நிரப்பப்படுகிறது (ரோமர் 5:5). ஆவியானவர் தந்தருளின வரத்தின்படியே அந்நிய பாஷைகளில் பேசுவது இதற்கு அடையாளமாயிருக்கிறது. (அப் 2:4)

**வேறுபிரிதல்:**

மாறுபாடுள்ள சந்ததியை விட்டு நம்மை நாம்

வேறுபிரித்துக் கொள்ளவேண்டும் (அப் 2:40)

1. ஜீவியத்தில் மாறுபாடுள்ளவர்கள் (2 கொரி 6:14-18, பிலி 2:15)
2. உபதேசத்தில் மாறுபாடுள்ளவர்கள் (கலா 1:7, 1 தீமோ 4:1-3; 2 யோவான் 10)

**பூரண பரிசுத்தமாகுதல்:**

நாம் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் இவற்றில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (1தெச 5:23)

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் (எபி 13:12)
2. தேவனுடைய வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் (யோவான் 17:17)
3. பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல் (ரோமர்15:15)

**ஜெய ஜீவியம்:**

இது நம் ஜீவியத்திலும் ஊழியத்திலும் உலகம், மாமிசம், பிசாசு இவற்றின் மீது பூரண ஜெய மெடுப்பதைக் குறிக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளும் வாக்குத்தத்தம் அருளப்படுகிறது (வெளி 21:7)

**பிரதிஷ்டையுள்ள ஊழியம்:**

தேவன் சபையில் கிறிஸ்துவின் ஈவுகள் என அழைக்கப்படும் ஐந்து வித உத்தியோகஸ்தரை ஏற்படுத்தியிருக்கிறார் (எபே 4:7,11-13). இந்த உத்தியோகங்களை வகிக்கும் தேவ ஊழியர்கள்

மெல்கிசேதேக்கின் முறைமைக்குட்பட்டவர்கள் (எபி7:1-3, லூக்கா 14:26,27,33). அவர்களுக்குப் பரலோக ராஜ்யத்தின் இரகசியங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன (மத் 13:11). அவர்கள் கிறிஸ்துவாகிய மூலைக்கல்லின் மீது அஸ்திபாரக் கற்களாய் இருக்கின்றனர் (எபே 2:20-22).

**பூரணம்:**

இது மனுஷனைக்குறித்து தேவன் கொண்டுள்ள முழுத்திட்டமாகும். இருப்பினும் கிறிஸ்து இயேசுவிலுள்ள இந்தப் பூரணத்தை அடைந்து கொள்வதற்கான சிலாக்கியம் புதிய ஏற்பாட்டுச் சபைக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. (மத் 5:48, கொலோ 1:28).

**எடுத்துக்கொள்ளப்படுதல்:**

கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கிறிஸ்துவுக்குள் ஜீவிப்பவர்களுமான பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் திடீரென பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுவதே 'எடுத்துக்கொள்ளப்படுதல்' என்று அறியப்படுகிறது, இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் 'இரகசிய' வருகையில் நடைபெறும் (1தெச. 4:16,17)

**உபத்திரவக் காலமும் மகா உபத்திரவக் காலமும்:**

இது இரு சமமான பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஏழு வருட காலமாகும். இதில் அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியின்கீழ், முதல் பகுதியில் சபையில் கைவிடப்பட்டவர்களும், இரண்டாம் பகுதியில் யூதரும்

உபத்திரவப்படுத்தப்படுவார்கள் (வெளி 12:6,13-17; தானி 9:27; 12:7)

**உயிர்த்தெழுதல்:**

உயிர்த்தெழுதலின் பல்வேறு வரிசைகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முதல் வரிசை கிறிஸ்து. அது ஏற்கனவே நடந்தாயிற்று. அடுத்த நான்கு வரிசைகள் ஆயிர வருட அரசாட்சிக்கு முன்பும், அவற்றைத் தொடர்ந்துள்ள இரு வரிசைகள் ஆயிர வருட அரசாட்சிக்குப் பின்பும் நடைபெறும் (1 கொரி 16:23). உயிர்த்தெழுதலின் முதல் ஐந்து வரிசைகளும் சேர்ந்து முதலாம் உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகிறது (வெளி 20:6)

1. முதற்பலனான கிறிஸ்து (1 கொரி 15:23)
2. புதிய ஏற்பாட்டின் பூரணமாக்கப்பட்ட பரிசுத்த-வான்கள் (1கொரி 15:23)
3. உபத்திரவக்கால இரத்த சாட்சிகள் (வெளி 14:15)
4. இரண்டு சாட்சிகள் (வெளி 11:12)
5. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் பொதுவான இரத்த சாட்சிகளும் (வெளி 11:18,19)
6. இரட்சிக்கப்பட்டவர்கள் (யோவான் 5: 28,29)
7. துன்மார்க்கர் அல்லது இரட்சிக்கப்படாதவர்கள் (யோவான் 5:28,29; வெளி 20:12-15)

**ஆயிர வருட அரசாட்சி:**

இது முதலாம் உயிர்த்தெழுதலுக்குட்படும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அவருடைய பரிசுத்தவான்களும் இப்பூமியில் ஆளுகை செய்யும்

ஆயிரவருடக் காலமாகும். இந்தக் காலத்தில் பிசாசு கட்டப்பட்டிருப்பான் (வெளி 20: 2- 4).

**பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு:**

சமுத்திரம், மரணம், பாதாளம் ஆகியவை தங்கள் மரித்தோரை ஒப்புவிக்கும்(வெளி 20:13). மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவன் அவரவர் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்ப்பார் (வெளி 20:11,12). நீதிமான்கள் (செம்மறியாடுகள்) நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள். துன்மார்க்கர் (வெள்ளாடுகள்) அவியாத அக்கினியில் பங்கடைவார்கள் (மத் 25:33,34,41,46)

**நித்தியம்: பல்வேறு நித்திய வாசஸ்தலங்கள்:**

1. சீயோன் (வெளி.14:1) - புதிய ஏற்பாட்டின் ஜெயங்கொண்ட 1,44,000 தேவ ஊழியர்கள்
2. புதிய எருசலேம் (வெளி. 21:2) - புதிய ஏற்பாட்டின் ஜெயங்கொண்ட விசுவாசிகள்
3. புதிய வானம் (வெளி.21:1) - பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் இரத்த சாட்சிகளும்
4. புதிய பூமி (வெளி.21:1) - இரட்சிக்கப்பட்டவர்கள்
5. அக்கினிக்கடல் (இரண்டாம் மரணம்) (வெளி.20:10,14:21:8) - சாத்தானும், அவனுடைய சகல சேனைகளும், மரணமும், பாதாளமும், துன்மார்க்கரும்.


**மேலும் விபரங்களுக்கு:**

**பெந்தெகொஸ்தே சபை,** ரோஜா தெரு, S.V. நகர், **இரும்புலியூர்,** சென்னை - 63. Ph: 044 - 22790079